1981 ஏப்ரல் 24]

STUDENT LEADER OF WESLEY HIGH SCHOOL IN ROYAPETTAH

*Q. No. 853—THIRU N. KITTAPPA: Will the Hon. the Chief Minister be pleased to state.

(a) Whether the police have received allegation about the assualt of a student leader of Wesley High School, Royapettah, Madras on or about the 4th September, 1980; and

(b) If so' the details of the investigations made to spot the culprits?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(ஆ) 1–9–1980 அன்று பகல் 1 மணிக்கு சென்னை வெஸ்லி உயர்நிலைப்பள்ளியின் மாணவர் தலைவரான திரு. மோகன் என்பவர் தாம் அடையாளம் தெரிந்த இரண்டு நபர்களால் அன்று தாக்கப்பட்டதாகவும், அன்று சில கோரிக்கைகளை முன்வைத்து பள்ளியில் ஒரு போராட்டம் நடத்தவிருந்ததாகவும் இராயப் பேட்டை காவல்நிலையத்தில் புகார் செய்தார். இ-2, இராயப் பேட்டை காவல் நிலையத்தில் வழக்கொன்று பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை செய்யப்பட்டது. மாணவர்கள் ஆசிரியர்கள் நியமனத்தில் நிர்வாகிகளின் போக்கில் குறைகண்ட ஆசிரியர்களின் ஒரு பகுதியினரின் தூண்டுதலின் பேரில்தான் மாணவர்கள் நிர்வாக எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என்று விசாரணையின் மூலம் தெரியவந்தது. தாக்கியவர்கள் யாரையும் திரு. மோகனால் அடையாளம் காட்ட இயலாததால், விசாரணை அதிகாரிகள் ஒன்றும் செய்ய இயலவில்லை. சட்டம் மற்றும் ஒழுங்கினை பராமரிக்க தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்கள் ஏற்கனவே தங்களுக்குக் கிடைக்கவேண்டிய சில சலுகைகளை கேட்பதற்கு முயற்சிக்கின்ற போது ஊழல் புரிகின்ற ஆசிரியர்கள் இந்த மாணவர்கள்மீது தாக்குதல் நடத்தி அதை முறியடிப்பதற்கு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது, போதுமான அளவில் அதிலே புலன் விசாரணை நடத்தப்படவில்லை. மாணவர்கள் குறைகளை வைப்பதற்குப் போதுமான வேறு வழிகள் இல்லாத நிலைமை ஏற்படுகிறது. இதைப்பற்றி அரசு மறுபரிசீலனை செய்து மீண்டும் புலனாய்வு செய்வதற்கு உத்திரவிட்டு குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தண்டிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பிரச்சினைகள் மாணவர்களுடைய கோரிக்கைகள் பற்றியது அல்ல. அவர்களது சலுகைகள் பற்றியோ அல்லது

கோரிக்கைகள் பற்றியதோ அல்ல. ஒரு வருட காலமாகத் தலைமையாசிரியராக இருக்கிறார்; தனக்குத் தலைமை ஆசிரியர் பதவி தரப்பட வேண்டுமென்று திரு. பி. இருதயராஜ் என்கிற மூத்த தமிழ் வித்துவான், ஒரு முறை யீட்டை பள்ளிக் கல்வி இயக்குநரிடம் கொடுத்ததாகத் தெரியவருகிறது. திரு. இருதயராஜும் அவருடன் சேர்ந்த சில ஆசிரியர்களும் செய்த தூண்டுதலினால் மோகனும் மற்ற மாணவர்களும் பள்ளி நிர்வாக சீர்கேட்டை எதிர்த்து துண்டு பிரசுரங்களை வெளியிட்டதாகவும் தெரிய வருகிறது. ஆகவே இது மாணவர்கள் பற்றிய பிரச்சினையல்ல. 11–9–1980 அன்று சுமார் 11-15 மணிக்கு மோகன், ஏ.ஜே. டேனியல் மற்றும் இருபது மாணவர்கள் தலைமை ஆசிரியரின் அறைக்குள் புகுந்து அங்கிருந்த மேஜை, நாற்காலி, தகவல் பலகை மற்றும் நாட்காட்டிகள் அனைத்தையும் கீழே தள்ளி உடைத்து நாசம் விளைவித்தனர். அப்போது தலைமையாசிரியர் அறையில் இல்லை. பிறகு மோகனும் மற்ற மாணவர்களும் இராயப்பேட்டை இ-2 காவல் நிலையத்திற்குச் சென்று புகார் கொடுத்தனர். பள்ளியின் தாளாளர் வந்து விசாரணை செய்த பின் மாணவர்கள் தம் செய்கைக்கு மன்னிப்புக் கோரினர். பிறகு அன்று மாலை ஆட்டோ ரிக்ஷாவில் மோகனும் சந்திரராகும், டேனியல் வீட்டிற்குச் சென்று விட்டு பள்ளிக்குத் திரும்பும்பொழுது மோகன் மயக்கமுற்று விழுந்தார். அதற்கு பிறகு மோகனை இரண்டு பேர்கள் அடித்தார்கள் என்று காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டது. அடித்தவர்கள் யார் என்று அவரால் அடையாளம் காட்ட இயலவில்லை.

வழக்குப் பதிவு செய்து எவ்வளவோ முயற்சி செய்தும் அடையாளம் காட்டப்படாத காரணத்தால் அந்த வழக்கைப்பற்றி ஒன்றும் செய்ய இயலவில்லை. அந்தப் பள்ளியைப் பொறுத்த வரையில் சுமுகமான சூழ்நிலை நிலவிவருகிறது.

திரு. கோவைத் தம்பி : பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்கள் ஆசிரியர்கள் மத்தியில் சமுதாய விரோதிகள் ஒரு சிலர் இப்படிப்பட்ட காரியங்களை கடந்த ஒரு ஆண்டுக்காலமாக செய்து வருகிறார்கள் என்ற காரணத்தால் பரவலாக மாணவர்களைப் பாதிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட சமூக விரோதிகளிடமிருந்து ஆசிரியர்கள், மாணவர்களைக் காப்பாற்றுகின்ற வகையில் சமூக விரோதச் செயல்களைச் செய்கின்ற குற்றவாளிகள் யார் என்பதைக் கண்டுபிடித்து— நடந்திருக்கின்ற இப்படிப்பட்ட ஒரு சில சம்பவங்களை வைத்து நாட்டு மக்களிடத்திலே பீதியைக் கிளப்பிவிடுகின்ற நிலைமை இருக்கின்ற காரணத்தினால்— இந்த சம்பவங்களை வைத்து அப்படிப்பட்ட செயல்களை முன்னின்று தடுக்க அரசு முன் வருமா ?

1981 ஏப்ரல் 24]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் சொல்வது பொதுப்படையானது. பொதுவான துணை வினாவைத்தான் கேட்டு இருக்கிறார்கள். ஒவ்வொரு ஊரிலேயும் உள்ள பள்ளியிலும் கல்லூரியிலும் ஒவ்வொரு விதமான கிளர்ச்சிகள், போராட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. கூடுமானவரையில் ஆங்காங்கிருக்கின்ற தலைமையாசிரியர்கள், கல்லூரி முதல்வர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களும் அதிலே ஈடுபட்டு குறைபாடுகள், கலவரங்கள் ஏற்பட்டால் அவைகளைத் தீர்க்க வேண்டிய பொறுப்பிலே இருக்கிறார்கள். அதற்காகத் தான் ஒவ்வொரு ஊரிலும் கல்லூரிகள், பள்ளிகள் பொறுத்த வரைக்கும் பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பிரதி நிதிகள் அடங்கிய சங்கங்களை வைத்து அவற்றின் மூலமாக அவற்றைத் தீர்ப்பதற்கு பொதுவான முறைதான் இருந்து வருகிறது. இந்த இரண்டு ஆசிரியர்களுக்கும் தலைமை ஆசிரியராக வருவதிலே போட்டி ஏற்பட்டு அவர்களே நேரடியாகத் தலையிடாமல் மாணவர்களை ஈடுபடுத்தி விட்டார்கள். இருதயராஜ் என்ற தமிழ் வித்துவான் 23—2—1976 முதல் 14—4—1976 வரையில் அவர் மிசா கைதியாக இருந்தார் என்றும் தெரியவருகிறது. ஆகவே ஆசிரியர்களுக்குள்ளே ஏற்பட்ட தகராறுதானே தவிர வேறு எந்தவிதமான தகராறும் இல்லை.

முத்துக் குளிக்கும் தொழிலாளர்களுக்கு நஷ்டஈடு வழங்கும் திட்டம்

*வினா எண். 854—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

முத்துக்குளி தொழிலாளி முத்து எடுக்கும் போது இறந்து விட்டால் நஷ்டஈட்டுத் தொகை கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சங்கு குளி தொழிலாளி சங்கு எடுக்கும்போது இறந்துவிட்டால் அவரது குடும்பத்திற்கு ரூபாய் 5,000 உதவித் தொகை அளிப்பது போல முத்துக் குளி தொழிலாளி முத்துக் குளிக்கும் போது இறந்து விட்டால் அவருடைய குடும்பத்திற்கும் 1978 ஆம் ஆண்டு தமிழ் நாடு மீனவர் நலம் மற்றும் துயர் துடைப்பு நிதி விதிகளின்படி ரூபாய் 5,000 உதவித் தொகை அளிக்க வேண்டும் என்று சமீபத்தில் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, முத்துக் குளிக்கும் தொழிலாளர்கள் முத்துக் குளிக்கும்போது, ஜாஸ் என்ற ஆங்கிலப் படத்திலே வருவதைப் போன்ற திமிங்கலங்களும் ரோஜர் மீன் போன்றவைகளும் தாக்குகின்றன. அப்போது அவர்கள் அவைகளால் பிடித்துக் தின்னப்பட்டாலோ